(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, GUDIYATTAM.
Case No. C.C.92/2014

DEPOSITION OF WITNESS FOR PW.1

Name : JAYAPAL S/O. NARAYANASAMY

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20.07.18

## குறுக்கு விசாரணை

*எதிரி வேலை செய்யும் குடியாத்தம் சவுத் இண்டியன் வங்கிக்கிளைக்கு எதிரில் ஜூஸ் கடை வைத்துள்ளேன். அதன்மூலமாக எதிரி எனக்கு பழக்கமானார். நான் 18 வருடமாக ஜூஸ் கடையில்தான் உள்ளேன். வருமானவரி கணக்கு தாக்கல் எதுவும் தாக்கல் செய்யவில்லை. குடியாத்தம் டவுன் தாராம்பட்டு நீல கோவிந்தப்பன் கோயில் தெரு கதவு எண்.9/4 லோகநாதன் என்பவரின் மகன் உமாசங்கரை எனக்கு தெரியாது. குடியாத்தம் அசோக்நகர் இந்திராகாந்தி தெரு கதவு எண்.355 கோவிந்தன் என்பவரின் மகன் செல்வகுமார் என்பவரை எனக்கு தெரியாது. ம.த.சா.ஆ.1 மற்றும் 2 ஆன கடனுறுதிச்சீட்டை சார்பதிவாளர் அலுவலகம் உள்ள பகுதியில் பத்திர எழுத்தாளர் நடராஜன் என்பவர் எழுதினார். எதிரி கையெழுத்து செய்தார். ம.த.சா.ஆ.9 வழக்கறிஞர் அறிவிப்பில் மற்றும் பிரமாண வாக்குமூலத்திலும், புகாரிலும் எதிரி எதற்காக பணம் வாங்கினார் என்று குறிப்பிட்டுள்ளீர்களா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. முதன்மை விசாரணையில்தான் எதிரி எதற்காக பணம் வாங்கினார் என்று சொல்லியுள்ளீர்கள் என்றால் சரிதான். எதிரி குறைந்த வட்டி தருவதாக கூறி என்னிடம் பணம் வாங்கினார். மாதம்மாதம் எதிரியிடம் வட்டி கேட்டேன். எதிரி வட்டி கொடுக்கவில்லை. 14 மாதங்கள் கழித்து எதிரி காசோலை கொடுத்தார். எதிரி உண்மையாகவே ரூபாய்.2,50,000 கடன் வாங்கியிருந்தால் ரூபாய்.2,50,000 க்கு காசோலை கொடுத்திருப்பார் என்று சொன்னால் வட்டியுடன் சேர்த்து ரூபாய் 3,00,000 க்கு காசோலை கொடுத்தார். பிரமாண வாக்குமூலம் மற்றும் புகாரிலும் வட்டியுடன் சேர்த்து ரூபாய் 3,00,000 க்கு காசோலை கொடுத்தார் என சொல்லவில்லை என்றால் சரிதான். கடன் வாங்கிய தேதியிலிருந்து எதிரி காசோலை கொடுத்த தேதி 15 மாதங்கள் என்று சொன்னால் 14 வது மாதத்திலே காசோலை கொடுத்து விட்டார். கடன் வாங்கிய தேதியிலிருந்து காசோலையில் உள்ள தேதிவரைக்கும் வட்டியை கணக்கிட்டால் வட்டித்தொகை ரூபாய் 56,250 ஆகும் என்றால் சரிதான். எதிரி உங்களிடம் உண்மையிலே உங்களிடம் கடன் வாங்கி இருந்தால் ரூபாய் 3,06,250 க்கு காசோலை கொடுத்திருப்பார் என்றால் ரூபாய் 6,250 ஐ மனிதாபிமான அடிப்படையில் தள்ளுபடி செய்துவிட்டு ரூபாய் 3,00,000 க்கு காசோலை வாங்கினேன். இந்த விவரங்களை வழக்கறிஞர் அறிவிப்பு, புகார், சத்தியபிரமாண வாக்குமூலம், முதல் விசாரணை ஆகியவற்றில் சொல்லவில்லை என்றால் சரிதான். டிசம்பர் 2011ல் ரூபாய் 5,00,000 பணம் கேட்டார். நான் 03.01.2012 ல் ரூபாய் 1,50,000 மும் மற்றும் 06.01.2012 ல் ரூபாய் 1,00,000 மும் கொடுத்தேன். வியாபாரம் செய்த வைத்திருந்த மற்றும் சேமிப்பில் வைத்திருந்த பணமும் கொடுத்தேன். 3 நாட்களில் வீட்டில் மனைவி மக்களிடம் மற்றும் வரவேண்டிய பணத்திலிருந்து ரூபாய் 1,00,000 கொடுத்தேன். யார் யாரிடம் எவ்வளவு பணம் வாங்கினேன் என்று ஞாபகம் இல்லை. எதிரிக்கு நீங்கள் பணம் கொடுக்கவும் இல்லை எதிரி உங்களுக்கு கடனுறுதிச்சீட்டு, காசோலை எதுவும் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரி எதற்காக உங்களிடம் பணம் வாங்கினார் என்ற விவரத்தை அறிவிப்பு, சத்தியபிரமாண வாக்குமூலத்தில் மற்றும் புகார் ஆகியவற்றில் சொல்ல இயலவில்லை என்று சொன்னால் சரியல்ல. ரூபாய் 20,000க்கும் மேலாக கடன் கொடுப்பதாக இருந்தால் டி.டி.மூலமாகத்தான் கொடுக்க வேண்டும் என்றால் அதைப்பற்றிய விவரம் தெரியாது. என் மனைவி சம்பாதிக்கிறார். எவ்வளவு சம்பாதிக்கிறார் என்றால் தெரியாது. எதிரிக்கு ரூபாய் 2,50,000 கொடுக்கும் அளவுக்கு உங்களுக்கு பொருளாதார வசதி இல்லை என்றால் சரியல்ல. என்னுடைய குடும்ப அட்டை பச்சை நிறம். 30.03.2013 பொது அறிவிப்பு தினகரன் செய்தித்தாளில் நீங்கள் கொடுத்துள்ளீர்கள் என்றால் அன்றைய தேதியில் நான் ஊரிலில்லை. நான் கொடுக்கச்சொல்லவில்லை. 10.04.2013 அன்று வழக்கறிஞர் திரு.கே.எம்.பூபதி மூலமாக*

மனுதாரார்களாக உமாசங்கர், நீங்கள் மற்றும் செல்வகுமார் ஆகியோர் எதிரி மற்றும் ரகோத்தமன் ஆகியோருக்கு எதிராக இன்சால்வெண்ட் மனு சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தீர்கள் என்றால் சரிதான். அந்த வழக்கு எண்.ஐ.பி.1/2013 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டது என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. அந்த மனுவில் ஆவண எண் ஆவணப்பட்டியலில் 8வதாக தினமலர் தினஇதழில். 30.03.2013 அன்று எச்சரிக்கை அறிவிப்பு தாக்கல் செய்திருந்தீர்கள் என்றால் ஞாபகம் இல்லை. உமாசங்கர், செல்வகுமார் ஆகியோருடன் சேர்ந்து இந்த ஐ.பி மனுவினை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரிதான். இந்த வழக்கில் உள்ள 2 காசோலைகளையும் எதிரி 25.03.2013 அன்று எதிரி கொடுத்திருந்தால் தனியாக சார்புநீதிமன்றத்தில் ஐ.பி.மனு தாக்கல் செய்யவேண்டிய அவசியமில்லை என்றால் சரியல்ல. ம.த.சா.ஆ.1 ஆன கடனுறுதிச்சீட்டில் மேல்வலது மூலையில் குறிப்பிடப்பட்டுள்ள ரூபாய்.1,50,000 ஒரு கையெழுத்தாகவும், 12 வது வரியில் உள்ள ரூபாய்.1,50,000 வேறு கையெத்தாகவும், வெவ்வேறு பேனாவினாலும் எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ம.த.சா.ஆ.1 ஆன கடனுறுதிச்சீட்டில் மேல்வலது மூலையில் குறிப்பிடப்பட்டுள்ள ரூபாய்.1,50,000ல் 1 என்ற எழுத்து இடைச்செருகலாக சேர்க்கபட்டுள்ளது என்றால் சரியல்ல. ம.த.சா.ஆ.2 ஆன கடனுறுதிச்சீட்டில் மேல்இடது மூலையில் குறிப்பிடப்பட்டுள்ள ரூபாய்.1,00,000மும் 8 வது வரியில் உள்ள ரூபாய்.1,00,000 மும் மற்றும் 9வது வரியில் எழுத்தாளான ரூபாய் 1,00,000 ஒரு நபராலும், மற்ற வரிகள் வேறொரு நபரால் வேறு மையால் எழுதப்பட்டது என்றால் சரியல்ல. உங்களிடம் எதிரி கடன் வாங்கிவில்லை என்று சொன்னாலும், ரூபாய் 50,000 எழுதி வேறொரு நபரிடம் கடனுறுதிச்சீட்டை கொடுத்தார் என்பதால் ரூபாய் 50,000 என்ற எழுத்து நடராஜனால் எழுதப்படவில்லை என்றால் சரியல்ல. ம.த.சா.ஆ.2 ஆன கடனுறுதிச்சீட்டு வெறொரு நபருக்கு தொகை ரூபாய் 1,00,000 மற்றும் 8 மற்றும் 9 வரியில் எழுதப்பட்டுள்ள ரூபாய் 1,00,000 எதிரியால் எழுதப்பட்டு மற்ற சங்கதிகள் பூர்த்தி செய்யாமல் கொடுக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நடராஜன் என்பவர் ரூபாய் 1,00,000 மற்றும் 8,9 வரியிலுள்ள ரூபாய் 1,00,000 பூர்த்தி செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரி உங்களிடம் கடன் வாங்கிவில்லை என்று சொன்னாலும் வேறொரு நபரிடம் இருந்து கடனுறுதிச்சீட்டு மற்றும் காசோலையைப்பெற்று பொய்யாக எதிரிமீது வழக்கு தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. ரூபாய் 1,50,000ல் 1 என்ற எண்ணை நீங்களே இடைச்செருகலாக எழுதிக்கொண்டீர்கள் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. குடியாத்தம் சார்பு நீதிமன்றத்திலிருந்து ஐ.பி.1/2013 என்ற வழக்கை ஆம்பூர் சார்பு நீதிமன்றத்திற்கு மாறுதலாகி ஐ.பி.2/2015 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். வழக்கை தாக்கல் செய்யும்போது 2 கடனுறுதிச்சீட்டையும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் ஞாபகம் இல்லை. உங்களிடம் வழக்கு தாக்கல் செய்யும்போதே ம.த.சா.ஆ.1 மற்றும் 2 இல்லாததால்தான் முதல் விசாரணையின்போது ம.த.சா.ஆ.1 மற்றும் 2 ஐ தாக்கல் செய்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல.